இந்திய உச்ச நீதிமன்றம்

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. கிருஷ்ண முராரி

உரிமையியல் மேல்முறையீடு எண் 2535/2023

(சிறப்பு அனுமதி மனு (உ) எண் 14884/2022 லிருந்து எழுகிறது)

ஆர். ஹேமலதா ... மேல்முறையீட்டாளர்(கள்)

–எதிர்–

கஸ்தூரி ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

பதிவுச் சட்டம், 1908 – பிரிவுகள் 17(1அ), பிரிவு 49க்கான வரம்புரை – குறித்தவகைப் பரிகாரச் சட்டம், 1877 – அத்தியாயம்–II – ஏற்றதை ஆற்றுதலுக்கான உரிமை வழக்கு – பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை – சான்றாக ஏற்குந்தன்மை – முடிவு: சட்டப்பிரிவு 49க்கான வரம்புரையின்படி, அசையாச் சொத்தினைப் பாதிப்பதும், பதிவுச் சட்டம் அல்லது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின்படி பதிவு செய்ய வேண்டுறுத்தப்படுகிறதுமான பதிவு செய்யப்படாத ஆவணம் ஒன்று, குறித்தவகைப் பரிகாரச் சட்டம், 1877 இன் அத்தியாயம்–II இன்படி ஏற்றதை ஆற்றுதலுக்கான ஓர் உரிமை வழக்கில், ஒப்பந்தம் ஒன்றிற்கான சான்றாக அல்லது பதிவு செய்யப்பட்ட முறையாவணம் ஒன்று வேண்டுறுத்தப்படாத சார் நடவடிக்கை எதற்குமான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படலாம் என்றாலும், அது பதிவுச் சட்டத்தின் பிரிவு 17 (1அ)க்கு உட்பட்டதாகும் – தற்போதைய வழக்கில், கேள்விக்குள்ளான கிரைய

உடன்படிக்கை, பதிவுச் சட்டத்தின் பிரிவு 17 (1அ)இன்படி ஆவண வகையின் கீழ் வரும் என்பது இரு தரப்பினர்களின் சார்பான வாதமேயல்ல – ஆகவே, உயர் நீதிமன்றம், கேள்விக்குள்ளான ஆவணம் பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை, ஏற்றதை ஆற்றுதலுக்கான ஓர் உரிமை வழக்கில் சான்றாக ஏற்கப்பட வேண்டும் மற்றும் வரம்புரையானது, பிரிவு 49 இன் முதல் பகுதிக்கான விதிவிலக்கு ஆகும் என்று பிரிவு 49 க்கான வரம்புரைமீது சார்ந்துநின்று, சரியாகவே தீர்மானித்துள்ளது – மேல்முறையீடு தோல்வியுறுகிறது – பதிவு (தமிழ்நாடு திருத்தம்) சட்டம், 2012 – சொத்துரிமை மாற்றுச் சட்டம், 1882 – பிரிவுகள் 53, 53 அ – குறித்தவகைப் பரிகாரம்.

பதிவுச் சட்டம், 1908 – பிரிவு 17(1)(எ) – பதிவு (தமிழ்நாடு திருத்தம்) சட்டம், 2012 – விளைவு குறித்து – விவாதிக்கப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>

1. தயாள் சிங் –எதிர்– இந்தர் சிங், (1926) 24 எல்.டபிள்யூ. 396.

<u>தீர்ப்புரை</u>

<u>நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா</u>:

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. மு.வ. எண் 199/2014 இன் வ.வி. எண் 159/2017 இல் விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைச் செல்லாததாக்கி, நீக்கறவு செய்தும், இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளரால் தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு விண்ணப்பம் எண் 1877/2017 இல் உயர் நீதிமன்றம் மேற்படி சீராய்வு விண்ணப்பத்தை அனுமதித்தும், கேள்விக்குள்ளான ஆவணத்தை, ஏற்றதை ஆற்றுதலுக்கான உரிமை வழக்கில், சான்றாக ஏற்றுக்கொள்வதற்கு பணித்தும்,

சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை அமர்வினால் 1.2.2022 ஆம் தேதியிடப்பட்டு வழங்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவால் பாதிப்படைந்தும், அதிருப்தியுற்றும், முதன்மை வழக்குப் பிரதிவாதி தற்போதைய மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

2. தற்போதைய மேல்முறையீட்டுக்கு வழிகோலிய பொருண்மைகளின் சுருக்கமாவது:

2.1. இங்குள்ள எதிர்மேல்முறையீட்டாளர் முதன்மை வழக்கு வாதியாவார் (இதன் பின்னர், "முதன்மை வழக்கு வாதி" எனக் குறிப்பிடப்படுவார்), இவர் 10.9.2013 ஆம் தேதியிடப்பட்ட கிரைய உடன்படிக்கையில் ஏற்றதை ஆற்றுதலுக்காக உரிமையியல் வழக்கான மு.வ. எண் 199/2014 ஐ தாக்கல் செய்தார். வாதி, வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டப் பின்னர், மேல்முறையீட்டாளர்/முதன்மை வழக்குப் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில், 10.9.2013 ஆம் தேதியிடப்பட்ட உடன்படிக்கையை சான்றாக ஏற்பது குறித்து, விசாரணை நீதிமன்றத்தால் முதல்நிலை எழுவினா வனையப்பட்டது. பிரதிவாதியின் வழக்கு யாதெனில், இந்தியப் பதிவுச் சட்டத்தின்படியாக தமிழ்நாடு திருத்தச் சட்டம் 29/2012 இன் அடிப்படையில், இதன் கீழ், ரூ.100/– மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்பிலான அசையாச் சொத்தின் கிரைய உடன்படிக்கை முறையாவணங்கள் கண்டிப்பாகப் பதிவு செய்யப்படவேண்டும், மேற்படி பதிவு செய்யப்படாத ஆவணம் சான்றாக ஏற்கத்தக்கதல்ல என்பது பிரதிவாதியின் சார்பான வாதமாகும். இதற்கு மாறாக, பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை, ஏற்றதை ஆற்றுதலுக்கான ஓர் உரிமை வழக்கில் ஓர் ஒப்பந்தச் சான்றாக ஏற்கப்படலாம் என்பதற்கு சட்டப் பிரிவு 49(அ) மற்றும் (இ)ஐ சார்ந்துநின்று வாதிடப்பட்டது. 10.9.2013 ஆம் தேதியிடப்பட்ட பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கையானது, சான்றாக ஏற்கப்படக்கூடாது எனக் கருத்துரைத்து, முதல்நிலை எழுவினாவை

பிரதிவாதிக்கு ஆதரவாகவும், வாதிக்கு எதிராகவும் அறிவார்ந்த விசாரணை நீதிமன்றம் முடிவு செய்தது.

2.2. விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவால் பாதிப்படைந்தும், அதிருப்தியுற்றும், வாதி, உயர் நீதிமன்றத்தில் சீராய்வு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தார். உயர் நீதிமன்றம், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம் அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கறவு செய்து, பதிவுச் சட்டத்தின் பிரிவு 49 ஐ சார்ந்துநின்று, சீராய்வு மனுவை அனுமதித்து, கேள்விக்குள்ளான உரிமை வழக்கு சட்டப்பிரிவு 49 க்கான வரம்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள முதல் விதிவிலக்கிற்குள் வருகின்ற ஏற்றதை ஆற்றுதலுக்கான ஓர் உரிமை வழக்கு எனும் சங்கதியைப் பரிசீலித்து, அந்த கேள்விக்குள்ளான உடன்படிக்கையைச் சான்றாக ஏற்குமாறு பணித்தது.

2.3. பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கையைச் சான்றாக ஏற்குமாறு ஓர் ஏற்றதை ஆற்றுதலுக்கான உரிமை வழக்கில் பணிக்கின்ற உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவை எதிர்த்து, முதன்மை வழக்குப் பிரதிவாதி இம்மேல்முறையீட்டைத் தாக்கல் செய்துள்ளார்.

3. இங்குள்ள மேல்முறையீட்டாளர்/முதன்மை வழக்குப் பிரதிவாதி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் முனைப்புடன் வாதிட்டது யாதெனில், வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, பதிவு செய்யப்படாத உடன்படிக்கையை சான்றாக ஏற்கப் பணித்ததில், உயர் நீதிமன்றம் அடிப்படையிலேயே தவறிழைத்துவிட்டது என்பதாகும்.

3.1. இந்த உரிமை வழக்குக்கு அடிப்படையாக அல்லது முக்கியமானதாக உள்ள 10.9.2013 ஆம் தேதியிடப்பட்ட கிரைய உடன்படிக்கை, பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட நிலைப்பாடாகும், மேலும், கிரைய உடன்படிக்கை 1.12.2012 முதற்கொண்டு கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற தமிழ்நாடு திருத்தப் பதிவுச் சட்டப்பிரிவு 17 இன் அடிப்படையில், உரிமை வழக்கின் முதன்மை நோக்கத்தின் பொருட்டாக அதனைச் சான்றாவணமாகக் காட்டப்பட முடியாதென வாதிடப்படுகிறது.

3.2. கிரைய உடன்படிக்கைத் தொடர்பான பதிவுச் சட்டப்பிரிவு 17 இன் உட்பிரிவு (2) உடன் இணைந்த "விளக்கமும்" நீக்கப்பட்டுள்ளது என வாதிடப்படுகிறது. மேற்படி விளக்கமானது, *தயாள் சிங் –எதிர்– இந்தர் சிங், (1926) 24 எல்.டபிள்யூ. 396* என்ற வழக்கில் அரசப் பேரவையின் தீர்ப்புரைக்கு மேலோங்கியிருக்கும் விதமாக, 1927 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் மூலம் இடைச்செருகப்பட்டது என வாதிடப்படுகிறது. அவ்வழக்கில், சொத்துரிமை மாற்றுச் சட்டப்பிரிவு 55(6)(v)இன்படி, சொத்தின் மீதான ஒரு பொறுப்புரிமையான கிரைய உடன்படிக்கையின் கீழ் செலுத்தப்பட்ட முன்பணம் ஓர் உரிமைநலனை ஏற்படுத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால், பதிவு செய்யப்படாத உடன்படிக்கை சான்றாக ஏற்கப்பட முடியாது எனக் கருத்துரைக்கப்பட்டது என வாதிடப்படுகிறது. விளக்கமானது, சூழ்நிலைக்கேற்ப தீர்வளித்து, கட்டாயப் பதிவின் தேவையிலிருந்து கிரைய உடன்படிக்கையைக் காக்கிறது.

3.3. கிரைய உடன்படிக்கை, சொத்தின் மீது உரிமைநலனையோ அல்லது பொறுப்புரிமையையோ ஏற்படுத்தாது என சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 54 கூறுகிறது என வாதிடப்படுகிறது. பதிவுச் சட்டப்பிரிவு 1(ஆ) மற்றும் (இ)ஐ பொறுத்தவரையில், பிரிவு 17(2)(v)இன்படி, ஓர் எளிய உடன்படிக்கை/ஆவணம் மற்றொரு ஆவணத்தைப் பெறும் உரிமையை

ஏற்படுத்துவதால் கட்டாயப் பதிவிலிருந்து தடுக்கப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு திருத்தத்திற்கு முன்னரும், திருத்தத்திற்குப் பின்னரும், ஒப்பந்த உறுதிப்பணச் செலுத்தத்தைக் கூறுகின்ற அல்லது அதுபோன்ற கிரைய உடன்படிக்கையானது பதிவு செய்யப்பட வேண்டியதில்லை என வாதிடப்படுகிறது. மேற்கண்ட காப்புரைகளைத் தவிர்த்து, கிரைய உடன்படிக்கை அசையாச் சொத்தைப் பாதிக்கும் ஆவணமாதலால், அதுவும் பதிவு செய்யப்படவேண்டியதேயாகும் என வாதிடப்படுகிறது. தற்போது 2012 ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்திற்குப் பின்னர், ரூ.100/– அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கான கிரைய உடன்படிக்கையானது கண்டிப்பாகப் பதிவு செய்யப்படவேண்டும் என வாதிடப்படுகிறது. *தயாள் சிங்* வழக்கிற்குப் பின்னர், 1927 ஆம் ஆண்டு திருத்தத்தின்படி அறிமுகப்படுத்தப்பட்ட சட்டப்பிரிவு 17(2)இல் உள்ள "விளக்கம்" தற்போதைய திருத்தச் சட்டத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளதால், முன்தொகை செலுத்துவதற்கான வாசகத்தைக் கொண்டுள்ள உடன்படிக்கையும் கட்டாயமாகப் பதிவு செய்யப்படவேண்டும். முன்தொகையும், கிரைய மறுபயனும் தரப்பினர்களுக்கிடையிலான பரிவர்த்தனைகளின் இன்றியமையாதக் கூறுகளாகும்.

3.4. பதிவுச் சட்டப்பிரிவு 49 (அ) மற்றும் (இ)இன்படி, ஓர் ஆவணம் பதிவு செய்யப்பட வேண்டியதாகிறது, பதிவு செய்யப்படவில்லையெனில், அதிலுள்ள அசையாச் சொத்தை அது பாதிக்காது மற்றும் அச்சொத்தைப் பாதிக்கும் ஏதேனுமொரு பரிவர்த்தனையில், அது சான்றாக ஏற்கப்படமுடியாது என வாதிடப்படுகிறது. 2012 ஆம் ஆண்டு திருத்தத்திற்கு முன்னர், கிரைய உடன்படிக்கை பதிவு செய்யப்படத் தேவையில்லாதபோது, பதிவுச் சட்டப்பிரிவு 49(அ) மற்றும் (இ), கிரைய உடன்படிக்கை தொடர்பாக செயல்பாட்டில் இருந்ததில்லை என வாதிடப்படுகிறது. அத்தகைய அசையாச் சொத்தைப் பாதிக்கின்ற அல்லது அந்த முறையில் அசையாச் சொத்தைப் பாதிக்கின்ற நடவடிக்கை எதிலும் பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை சான்றாக

ஏற்கப்படுவதில் கட்டுப்பாடு ஏதுமில்லை. இவ்வாறாக, ஆவணத்திலுள்ள வரையறைகளும், அதில் உள்ளடங்கியுள்ள பரிவர்த்தனையும் திருத்தத்திற்கு முன்னரான நடவடிக்கை எதிலும் முழுமையாக நம்பப்படலாம். எனினும், தற்போது திருத்தத்திற்குப் பின்னர், நிலைமுறைச் சட்டமும் சாட்சியச் சட்டவிதியுமான பதிவுச் சட்டப்பிரிவு 49(அ) மற்றும் (இ), பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கைக்குப் பொருந்தும், மேலும் அது, அசையாச் சொத்தைப் பாதிக்காது மற்றும் அசையாச் சொத்தைப் பாதிக்கும் பரிவர்த்தனையைச் சான்றாக ஏற்கப்பட முடியாது என வாதிடப்படுகிறது.

3.5. மேலும், 2012 ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்திற்கு முன்னதாக இருந்த நிலையே எதிர்ப்புக்குள்ளான உத்தரவில் வகுக்கப்பட்டிருப்பதால், எதிர்ப்புக்குள்ளான உத்தரவில் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் தரப்பட்டுள்ள பொருள்விளக்கம் பின்பற்றப்படுமெனில், அது, மேற்படி திருத்தத்தைப் பயனற்றதாகவும் அர்த்தமற்றதாகவும் ஆக்கிவிடும். கிரைய உடன்படிக்கை கட்டாயமாகப் பதிவு செய்யத்தக்க ஆவணமாக ஆக்கப்படுவதற்கு பின்புலத்திலுள்ள சட்ட உட்கருத்து, மாண்பமை உயர் நீதிமன்றத்தால் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது என பிரதிவாதிக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் வாதிடப்படுகிறது.

3.6. சட்டப்பிரிவு 17(1)(எ)இல் கிரைய உடன்படிக்கை தொடர்பான குறிப்பிட்ட வகையத்தை அறிமுகப்படுத்திய பின்னரும், கூறு (எ)ஐ சேர்ப்பதற்கு பிரிவு 17(2)இல் திருத்தம் செய்யாத நிலையில், அதற்குள்ளேயே அடங்கியுள்ளது என்றும், பிரிவு 17(2)(v)ஆனது, உட்பிரிவு (1)இன் (ஆ) மற்றும் (இ) என்ற பொது வகையத்தின் கீழ் உள்ளடங்கும் ஆவணங்கள் தொடர்பாகவே செயல்படும் என்றும் வாதிடப்படுகிறது. அந்த வகையில் எடுத்துக்கொண்டால், பிரிவு 17(2)

(v)ஆனது, அடைமானம், குத்தகை, கைத்துறப்பு மற்றும் பரிமாற்றம் போன்ற அனைத்து இதர உடன்படிக்கைகளுக்கும் பொருந்துமேயன்றி, கிரைய உடன்படிக்கைக்குப் பொருந்தாது என வாதிடப்படுகிறது.

3.7. மேற்படி வாதங்களை வைத்து, தற்போதைய மேல்முறையீட்டை அனுமதித்து, மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவைச் செல்லாததாக்கி நீக்கறவு செய்யவும் மற்றும் அறிவார்ந்த விசாரணை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவை மீட்டளிக்கவும் வேண்டப்படுகிறது.

4. தற்போதைய மேல்முறையீட்டை எதிர்த்துரைக்கையில், முதன்மை வாதி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், பதிவுச் சட்டப்பிரிவு 49–இன் வரம்புரையைப் பெரிதும் சார்ந்துநின்றார், அது, அசையாச் சொத்தைப் பாதிப்பதும், பதிவுச் சட்டத்தால் பதிவு செய்யப்பட வேண்டியதுமான ஒரு பதிவு செய்யப்படாத ஆவணம், குறித்தவகைப் பரிகாரச் சட்டத்தின் அத்தியாயம்–II இன் கீழ் ஏற்றதை ஆற்றுதலுக்கான ஓர் உரிமை வழக்கில், ஒப்பந்தத்தின் சான்றாகவோ அல்லது பதிவு செய்யப்பட்ட முறையாவணத்தால் பாதிக்கப்படாத சார் நடவடிக்கை எதிலும் சான்றாகவோ ஏற்கப்படலாம் எனத் திட்டவட்டமாக வகைசெய்கிறது.

4.1. மாண்புமிகு உயர் நீதிமன்றத்தால் சரியாகவே கருத்துரைக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டது போன்று, அசையாச் சொத்து எதனையும் பாதிக்கின்ற கிரைய உடன்படிக்கை/உடன்படிக்கை, கண்டிப்பாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என வகைசெய்கின்ற சட்டப்பிரிவு 17(1)(எ)ஐ இடைச்செருகி, தமிழ்நாடு பதிவுச் சட்டம் 2012 இன் மூலம், பதிவுச் சட்டத்தின் பிரிவு 17(1)இல் திருத்தம் கொண்டுவரப்பட்டபோதிலும், பதிவுச் சட்டத்தின் பிரிவு 49 இல் மிகக்

குறிப்பாக, சட்டப்பிரிவு 49 இன் வரம்புரையில் ஏற்புடைய திருத்தம் ஏதுமிவில்லை என வாதிடப்படுகிறது.

4.2. தமிழ்நாடு திருத்தச் சட்டம் 2012 இன் நோக்கமும் கருத்தும் குறித்து, மிகக் குறிப்பாக பதிவுச் சட்டப்பிரிவு 17(1)(எ)ஐ இடைச்செருகியது குறித்து பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது என்றாலும், அது உயர் நீதிமன்றத்தால் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவில், விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. அசையாச் சொத்தின் கிரைய உடன்படிக்கை முறையாவணங்கள், அசையாச் சொத்து தொடர்பான பகர அதிகார முறையாவணங்கள் மற்றும் உரிமைமூல ஆவணங்களை வைத்திருக்கும் உடன்படிக்கையைக் காட்டுகின்ற முறையாவணங்கள் போன்ற இவ்வாவணங்களை பொதுமக்கள் வெள்ளைத் தாள்களிலும், பெயரளவிலான மதிப்புடைய முத்திரைத் தாள்களிலும் எழுதுவதால், கருவூலத்திற்கு இழப்பை ஏற்படுத்திவிடுகின்றனர் என்ற காரணத்தால், தமிழ்நாடு அரசினால் இத்திருத்தம் முதன்மையாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்ற கருத்துரை, சட்டம் (29/2012)இன் நோக்கங்கள் மற்றும் காரணங்களின் விவரங்களைப் பார்வையிடுவதிலிருந்து தெரியவருகிறது என வாதிடப்படுகிறது.

4.3. மேற்படி வாதங்களுடனும், பதிவுச் சட்டப்பிரிவு 49 ஐ பெரிதும் சார்ந்துநின்றும், தற்போதைய மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

5. நாங்கள், அந்தந்த தரப்பினர்களின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களை விரிவாகக் கேட்டோம். தமிழ்நாடு அரசுக்கு பொருந்தத்தக்க பதிவுச் சட்டப்பிரிவு 17(1)(எ) இடைச்செருகப்பட்டு, ரூ.100/– மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய அசையாச் சொத்தின் கிரையம்

தொடர்பான உடன்படிக்கை முறையாவணங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்படவேண்டும் எனும் பதிவுச் சட்டப்பிரிவு 17(1)(எ)இன் விளைவு குறித்தும், அசையாச் சொத்தின் கிரையம் தொடர்பாக அந்தப் பதிவு செய்யப்படாத உடன்படிக்கை, ஏற்றதை ஆற்றுதலுக்கான ஓர் உரிமை வழக்கில் சான்றாக ஏற்கப்படலாமா? என்பதும் இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்காக முன்னிடப்பட்ட குறுகிய வினாவாகும்.

6. மேற்படி பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கையிலும், அந்தந்தத் தரப்பினர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களை ஆய்வு செய்கையிலும், பதிவு (தமிழ்நாடு திருத்தம்) சட்டம், 2012 க்கு முன்பாக பொருந்தக்கூடிய பதிவுச் சட்டம் 1908, பிரிவு 17 ம், திருத்தச் சட்டம், 2012 க்கு பிந்தைய பிரிவு 17 ம் பார்வையிடப்பட வேண்டியவையாகும், அவை பின்வருமாறு:

7. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருத்தச் சட்டத்திற்கு முன்னதான பதிவுச் சட்டம், 1908 இன் பிரிவு 17 பின்வருமாறு:

> *"17. கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள்.– (1) பின்வரும் ஆவணங்கள் தொடர்பான சொத்தானது, எந்த மாவட்டத்தில் அமைந்திருக்கிறதோ, அங்கு, சட்ட எண் XVI/1864 அல்லது இந்தியப் பதிவுச் சட்டம் 1866 அல்லது இந்தியப் பதிவுச் சட்டம் 1871 அல்லது இந்தியப் பதிவுச் சட்டம், 1877 அல்லது இச்சட்டம் நடைமுறைக்கு வந்த அல்லது வருகின்ற நாளன்று அல்லது அந்த நாளுக்குப் பின்பு எழுதிக்கொடுக்கப்பட்டிருப்பின், அவை பதிவு செய்யப்படுதல் வேண்டும்; அதாவது,*
>
> *(அ) அசையாச் சொத்தின் கொடைக்கான முறையாவணங்கள்;*

(ஆ) நூறு ரூபாய் மற்றும் அதற்கும் மேற்பட்ட மதிப்புடைய அசையாச் சொத்தின் அல்லது அதற்கான உரிமை, உரிமைமூலம் அல்லது உரிமைநலன் எதுவும், அது உற்றமைந்தாலும் அல்லது அது நேரக்கூடியதாக இருந்தாலும் அல்லது அது நிகழ்காலத்தில் அல்லது அது வருங்காலத்தில் ஏற்படுவதாக, விளம்புவதாக, குறித்தளிப்பதாக, வரம்பிடுவதாக அல்லது அழித்துவிடுவதாக புலப்படுகிற அல்லது செயற்படுகிற விருப்புறுதி ஆவணம் அல்லாத பிற முறையாவணங்கள்;

(இ) அத்தகைய உரிமை, உரிமைமூலம் அல்லது உரிமைநலன் எதனையும் ஏற்படுத்துதல், விளம்புதல், குறித்தளித்தல், வரம்பிடுதல் அல்லது அழித்துவிடுதல் காரணமாக மறுபயன் எதுவும் பெறப்பட்டது அல்லது செலுத்தப்பட்டது என்பதை ஒப்புகை செய்கிற விருப்புறுதி ஆவணமல்லாத முறையாவணங்கள் மற்றும்;

(ஈ) ஆண்டுக்கு ஆண்டு அல்லது ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட கால அளவு எதற்கும் அல்லது ஆண்டு வாடகைக்கு வகைசெய்கிற அசையாச் சொத்தின் குத்தகைகள்;

[(உ) ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பாணை அல்லது ஆணை எதுவும் அல்லது தீர்வம் எதுவும், நூறு ரூபாய் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய அசையாச் சொத்தின் அல்லது அதற்கான உரிமையை, உரிமைமூலத்தை அல்லது உரிமைநலனை அது உற்றமைந்திருந்தாலும் அல்லது நேரக்கூடியதாக இருந்தாலும், நிகழ்காலத்தில் அல்லது வருங்காலத்தில் ஏற்படுவதாக, விளம்புவதாக, குறித்தளிப்பதாக, வரம்பிடுவதாக அல்லது அழித்துவிடுவதாகப் புலப்படுகிற அல்லது செயல்படுகிறபோது, அந்தத் தீர்ப்பாணை அல்லது ஆணை அல்லது தீர்வத்தை மாற்றல் செய்கிற அல்லது குறித்தளிக்கிற விருப்புறுதி ஆவணம் அல்லாத முறையாவணங்கள்:]

வரம்புரையாக [மாநில அரசு] [அதிகாரமுறை அரசிதழில்] வெளியிடப்படும் ஆணை வாயிலாக, மாவட்டம் அல்லது மாவட்டம் ஒன்றின் பகுதி எதிலும் ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத கால அளவுகளுடனும், ஒதுக்கப்படும் ஆண்டு குத்தகைத் தொகை ஐம்பது ரூபாய்க்கு மிகாமலும் நிறைவேற்றப்படும் குத்தகை எதற்கும் இந்த உட்பிரிவின் செயற்பாட்டிலிருந்து விலக்களிக்கலாம்.

[(1அ) சொத்துரிமை மாற்றுச் சட்டம், 1882 (4/1882), பிரிவு 53அ–இன் நோக்கத்திற்காக, அசையாச் சொத்து எதுவும், மறுபயனுக்கான மாற்றத்திற்கு ஒப்பந்தங்களைக் கொண்டிருக்கும் ஆவணங்கள், பதிவுச் சட்டம் மற்றும் தொடர்புடைய பிற சட்டங்கள், 2001 (48/2001)இன் தொடக்கத்திலிருந்தோ அல்லது அதற்குப் பின்னரோ நிறைவேற்றப்பட்டிருக்குமெனில், அவை பதிவு செய்யப்படவேண்டும் மற்றும் அத்தகைய ஆவணங்கள், அத்தகைய தொடக்கத்திலிருந்தோ அல்லது அதற்குப் பின்னரோ பதிவு செய்யப்படவில்லையெனில், பின்னர், அவை, மேற்படி பிரிவு 53அ–இன் நோக்கங்களுக்காக, எவ்விளைவையும் கொண்டிருக்காது.]

(2) உட்பிரிவு (1)இன் கூறு (ஆ) மற்றும் (இ) எதுவும்,

(i) இணக்க ஒப்பாவணம் எதற்கும்; அல்லது

(ii) ஒரு கூட்டுப் பங்கு நிறுமனத்தின் சொத்திருப்புகள், முழுவதும் அல்லது அதன் பகுதி அசையாச் சொத்தாக இருந்தபோதிலும், அத்தகைய நிறுமத்தின் பங்குகள் தொடர்பான முறையாவணம் எதற்கும்; அல்லது,

(iii) அத்தகைய நிறுமம் எதனாலும் வழங்கப்பட்டுள்ள மற்றும் அந்த நிறுமத்தின் பதிவு செய்யப்பட்ட முறையாவணம் ஒன்றின் வாயிலாக அதன் அசையாச் சொத்து முழுவதையும் அல்லது அதன் பகுதியை

அல்லது அதிலுள்ள உரிமைநலன் எதையும் அத்தகைய கடனீட்டு ஆவணங்களை வைத்திருப்பவரின் நலனுக்காக, பொறுப்புரிமையர்களுக்கு பொறுப்புரிமையின்மீது அடைமானம் வைத்திருக்கிற அல்லது சொத்து மாற்றம் செய்திருக்கிற அல்லது பிறவாறாக மாற்றியிருக்கிறபோது, அந்த முறையாவணம், கடனீட்டு ஆவணங்களை வைத்திருப்பவர்களுக்கு அளிக்கிற பிணையத்தின் அளவுக்குத் தவிர, அசையாச் சொத்தில் உரிமை, உரிமை மூலம் அல்லது உரிமைநலன் எதனையும் ஏற்படுத்தாத, விளம்பாத, குறித்தளிக்காத, வரம்பிடாத அல்லது அழிக்காததுமான கடனீட்டு ஆவணம் எதற்கும்; அல்லது

(iv) அத்தகைய நிறுமம் எதனாலும் வழங்கப்பட்டுள்ள கடனீட்டு ஆவணம் எதன்மீதும் எழுதப்பட்ட மேற்குறிப்பு அல்லது அதன் உரிமை மாற்றம் எதற்கும்; அல்லது

(v) அசையாச் சொத்திற்கு அல்லது அசையாச் சொத்தில் நூறு ரூபாய்க்கு மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய உரிமை, உரிமை மூலம் அல்லது உரிமைநலன் எதனையும் அது தானாகவே ஏற்படுத்தாமல், விளம்பப்படாமல், குறித்தளிக்காமல், வரம்பிடாமல் அல்லது அழிந்துவிடாத, ஆனால் பிற ஆவணம் எதுவும் [உட்பிரிவு (1அ)இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களைத் தவிர்த்து உள்ள ஆவணம் எதுவும்], அது எழுதிக் கொடுக்கப்படுகிறபோது அத்தகைய உரிமையை, உரிமை மூலத்தை அல்லது உரிமைநலனை ஏற்படுத்துமோ, விளம்புமோ, குறித்தளிக்குமோ, வரம்பிடுமோ அல்லது அழித்துவிடுமோ அத்தகைய பிற ஆவணத்தையும் பெறுவதற்கான ஓர் உரிமையை மட்டுமே உண்டாக்கும் ஆவணம் எதற்கும்; அல்லது

(vi) [இணக்க உடன்பாடு ஒன்றின்மீது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதும் மற்றும் உரிமை வழக்கு அல்லது

நடவடிக்கைக்குரிய விடயப்பொருள் அல்லாத அசையாச் சொத்தை உள்ளடக்கியதுமான தீர்ப்பாணை அல்லது உத்தரவு அல்லாத], நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்பாணை அல்லது உத்தரவு எதற்கும்; அல்லது

(vii) [அரசாங்கத்தினால்] மானியமாக அளிக்கப்பட்ட அசையாச் சொத்து எதற்கும்; அல்லது

(viii) வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால் செய்யப்பட்ட பாகப்பிரிவினைக்கான முறையாவணம் எதற்கும்; அல்லது

(ix) நில மேம்பாட்டுச் சட்டம், 1871 அல்லது நில மேம்பாட்டுக் கடன்கள் சட்டம், 1883 இன்படி கடன் வழங்கும் ஆணை அல்லது கடனைச் செலுத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட சார்பிணையத்திற்கான முறையாவணம் எதற்கும்; அல்லது

(x) வேளாண் கடன்கள் சட்டம், 1884 இன்படி கடன் வழங்கும் ஆணை அல்லது இதே சட்டத்தின்படி கொடுக்கப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு பிணையளிப்பதற்கான முறையாவணம் எதற்கும்; அல்லது

[(x அ) அறக்கட்டளைகள் சட்டம், 1890 (6/1890)இன்படி அறக்கட்டளைகளின் பொருளாளர் ஒருவரிடம் சொத்து எதனையும் உற்றமைந்திருக்கும்படி, சொத்து அல்லது அத்தகைய பொருளாளர் எவரிடமிருந்தும் சொத்து எதனையும் நீக்கிவிடும்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதற்கும்; அல்லது]

(xi) அடைமானப் பணம் முழுவதும் அல்லது அதன் பகுதி எதுவும் செலுத்தப்பட்டதை ஒப்புகை செய்கிற அடைமான ஒப்பாவணத்தின் மீது மேற்குறிப்பு எதற்கும் மற்றும் அது அடைமானத்தைத் தீர்த்துவிடுவதற்குப் புலப்படாத வரைவுச்சீட்டாக இருக்கும்போது,

அடைமானம் ஒன்றின்படி கொடுபட வேண்டிய பணம் செலுத்தப்பட்டதற்கான பிற வரவுச்சீட்டு எதற்கும்; அல்லது

(xii) குடியியல் அல்லது வருவாய்த்துறை அலுவலர் ஒருவரால் பொது ஏலத்தின் வாயிலாக விற்கப்பட்ட சொத்து எதனையும் விலைக்கு வாங்குவதற்கு வழங்கப்பட்ட விற்பனை உறுதிச்சான்று எதற்கும் பொருந்தாது.

[விளக்கம்.– அசையாச் சொத்தின் விற்பனைக்கான ஒப்பந்தம் ஒன்றைச் செயற்படுத்துவதைப் புலப்படுத்தும் அல்லது செயற்படுத்தும் ஆவணம் ஒன்றை, அத்தகைய ஆவணமானது, ஒப்பந்த உறுதிப்பணம் எதனையும் அல்லது கொள்விலைத் தொகை முழுவதையும் அல்லது அதன் பகுதி எதனையும் செலுத்துவதற்கான சொற்றொடரைக் கொண்டிருக்கிறது என்ற பொருண்மையின் காரணத்தினால் மட்டுமே பதிவுசெய்யுமாறு வேண்டுறுத்தப்படுவது அல்லது எப்போதேனும் வேண்டுறுத்தப்படுவதாக இருந்தது என்று கொள்ளப்படுதல் ஆகாது.]"

8. தமிழ்நாடு திருத்தச் சட்டம், 2012 இன் மூலம், பிரிவு 17(1)(எ) இடைச்செருகப்பட்டுள்ளது மற்றும் பிரிவு 17(2)க்கான "விளக்கம்" நீக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு திருத்தச் சட்டம், 2012 இன் மூலம் இடைச்செருகப்பட்ட சட்டப்பிரிவு 17(1)(எ) கீழ்க்காணுமாறு:

"பிரிவு 17(1)(எ) நூறு ரூபாய் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்புடைய அசையாச் சொத்தின் விற்பனை தொடர்பான உடன்படிக்கை முறையாவணங்கள்."

9. ஆதலால், தமிழ்நாடு திருத்தச் சட்டம் 2012–லிருந்தோ அல்லது அதற்குப் பின்னரோ, சட்டப்பிரிவு 17(1)(எ)இன்படி, ரூ.100/– மற்றும் அதற்கு

மேற்பட்ட மதிப்புடைய அசையாச் சொத்தின் கிரையம் தொடர்பான உடன்படிக்கை முறையாவணமானது கண்டிப்பாகப் பதிவு செய்யப்பட வேண்டியதாகும். எனினும், அது அவ்வாறிருந்தபோதிலும் மற்றும் பிரிவு 17 இன் உட்பிரிவு (2)க்கான "விளக்கம்" நீக்கப்பட்டுள்ளபோதிலும், பதிவுச் சட்டப்பிரிவு 49 க்கு உகந்த திருத்தம் செய்யப்படவில்லை. பதிவுச் சட்டத்தின் பிரிவு 49 பின்வருமாறு:

"49. பதிவு செய்ய வேண்டுறுத்தப்படுகிற ஆவணங்களைப் பதிவு செய்யாது விடுதலின் விளைவு.– பிரிவு 17 இன்படி [அல்லது சொத்துரிமை மாற்றுச் சட்டம், 1882 (4/1882)இன் வகையம் எதன்படியும்] பதிவு செய்தல் வேண்டுறுத்தப்படுகிற ஆவணம் எதுவும் –

(அ) அதில் உள்ளடங்கியுள்ள அசையாச் சொத்து எதனையும், அல்லது

(ஆ) மகவேற்புக்கு வழங்கப்பட்ட அதிகாரம் எதனையும், அல்லது

(இ) அத்தகைய சொத்தினைப் பாதிக்கும் அல்லது அத்தகைய அதிகாரத்தை வழங்கும் நடவடிக்கை எதற்கும் சான்றாக ஏற்கப்பட்ட எதனையும்,

அது பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி, அதனைப் பாதித்தல் ஆகாது.

*[வரம்புரையாக, அசையாச் சொத்தினைப் பாதிப்பதும் இச்சட்டத்தின்படி அல்லது சொத்துரிமை மாற்றுச் சட்டம், 1882 (4/1882)இன்படி பதிவு செய்ய வேண்டுறுத்தப்படுகிறதுமான பதிவு செய்யப்படாத ஆவணம் ஒன்று, குறித்தவகைப் பரிகாரச் சட்டம், 1877 (3/1877)இன் அத்தியாயம் II இன்படி ஏற்றதை ஆற்றுதலுக்கான ஓர் உரிமை வழக்கில், ஒப்பந்தம் ஒன்றிற்கான சான்றாக, *** அல்லது பதிவு செய்யப்பட்ட முறையாவணம் ஒன்று வேண்டுறுத்தப்படாத சார் நடவடிக்கை எதற்குமான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படலாம்.]"*

10. ஆதலால், பிரிவு 49 க்கான வரம்புரையின்படி, அசையாச் சொத்தினைப் பாதிப்பதும் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்ய வேண்டுறுத்தப்படுகிறதுமான பதிவு செய்யப்படாத ஆவணம் ஒன்று, குறித்தவகைப் பரிகாரச் சட்டம், 1877 இன் அத்தியாயம் II இன்படி ஏற்றதை ஆற்றுதலுக்கான ஓர் உரிமை வழக்கில், ஒப்பந்தம் ஒன்றிற்கான சான்றாக அல்லது பதிவு செய்யப்பட்ட முறையாவணம் ஒன்று வேண்டுறுத்தப்படாத சார் நடவடிக்கை எதற்குமான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படலாம் என்பதாகும்.

11. இக்கட்டத்தில், தமிழ்நாடுத் திருத்தச் சட்டம், 2012 க்கான நோக்கங்கள் மற்றும் காரணங்களின் அடிப்படை விவரத்தையுங்கூட பார்வையிட்டு பரிசீலிக்கப்படவேண்டியுள்ளது. அசையாச் சொத்தின் கிரையம் போன்றவை தொடர்பான ஆவணங்களை, பொது மக்கள் வெள்ளைத் தாள்களிலும் மற்றும் பெயரளவிலான மதிப்புடைய முத்திரைத் தாள்களிலும் நிறைவேற்றி வந்ததால், பொதுக் கருவூலத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை மனதிற்கொண்டு, தமிழ்நாடு அரசினால் திருத்தமானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நோக்கங்கள் மற்றும் காரணங்களின் அடிப்படை விவரமானது கருத்துரைப்பதாகத் தெரிகிறது.

12. இக்கட்டத்தில், பிரிவு 49 க்கான வரம்புரை, சட்டம் எண் 21/1929 இன் மூலம் இடைச்செருகப்படலானது, அதன் பின்னர், சட்டம் எண் 48/2001 இன் மூலம், பிரிவு 17(1அ) இடைச்செருகப்பட்டு, அது, 24.9.2001 முதல் நடைமுறைக்கு வந்தது; இதன் மூலம், சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 53(அ)இன் நோக்கத்திற்காக, அசையாச் சொத்து எதுவும், மறுபயனுக்கான மாற்றத்திற்கு ஒப்பந்தங்களைக் கொண்டிருக்கும் ஆவணங்கள் 2001 லிருந்தோ அல்லது அதற்குப் பின்னரோ நிறைவேற்றப்பட்டிருக்குமெனில், அவை, கண்டிப்பாகப் பதிவு செய்யப்பட வேண்டும் மற்றும் அத்தகைய ஆவணங்கள், அத்தகைய

தொடக்கத்திலிருந்தோ அல்லது அதற்குப் பின்னரோ பதிவு செய்யப்படவில்லையெனில், பின்னர், மேற்படி பிரிவு 53(அ)இன் நோக்கங்களுக்காக எந்த விளைவையும் கொண்டிருக்காது. ஆகவே, பிரிவு 49 க்கான வரம்புரைக்கு உள்ள விதிவிலக்கானது, பதிவுச் சட்டத்தின் பிரிவு 17(1 அ)இன் கீழ் வகைசெய்யப்பட்டுள்ளது. அதாவது, பிரிவு 17(1 அ)இல் குறிப்பிடப்படும் ஆவணங்களைத் தவிர பிற ஆவணங்களைப் பொறுத்தவரையில், பிரிவு 49 க்கான வரம்புரை பொருந்தத்தக்கதாகும்.

13. இச்சூழ்நிலைகளில், பதிவுச் சட்டத்தின் பிரிவு 49 க்கான வரம்புரையின்படி, அசையாச் சொத்தினைப் பாதிப்பதும், பதிவுச் சட்டம் அல்லது சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின்படி பதிவு செய்ய வேண்டுறுத்தப்படுகிறதுமான பதிவு செய்யப்படாத ஆவணம் ஒன்று, குறித்தவகைப் பரிகாரச் சட்டம், 1877 இன் அத்தியாயம் II இன்படி ஏற்றதை ஆற்றுதலுக்கான ஓர் உரிமை வழக்கில், ஒப்பந்தம் ஒன்றிற்கான சான்றாக அல்லது பதிவு செய்யப்பட்ட முறையாவணம் ஒன்று வேண்டுறுத்தப்படாத சார் நடவடிக்கை எதற்குமான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படலாம் என்றாலும், அது பதிவுச் சட்டத்தின் பிரிவு 17(1 அ)க்கு உட்பட்டதாகும். கேள்விக்குள்ளான கிரைய உடன்படிக்கை/ஆவணம், பதிவுச் சட்டத்தின் பிரிவு 17(1 அ)இன்படி ஆவண வகையின் கீழ்வரும் என்பது இரு தரப்பினர்களின் சார்பான வாதமேயல்ல. ஆகவே, வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, உயர் நீதிமன்றம், கேள்விக்குள்ளான ஆவணம் அதாவது, கேள்விக்குள்ளான பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை, ஏற்றதை ஆற்றுதலுக்கான ஓர் உரிமை வழக்கில் சான்றாக ஏற்கப்பட வேண்டும் என்றும், வரம்புரையானது, பிரிவு 49 இன் முதல் பகுதிக்கான விதிவிலக்கு ஆகும் என்றும், பதிவுச் சட்டத்தின் பிரிவு 49 க்கான வரம்புரைமீது சார்ந்து நின்று, சரியாகவே கருத்துத் தெரிவித்து தீர்மானித்துள்ளது.

14. மேற்படி கருத்தின் அடிப்படையிலும், மேற்கூறப்பட்ட காரணங்களுக்காகவும், தற்போதைய மேல்முறையீடு தோல்வியுறுகிறது, மேலும் அது, தள்ளுபடி செய்யப்படுவதற்குரியதாகிறது. அதற்கிணங்க, அது தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதுமில்லை.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."